

அடிகளார் பொன்மொழிகள்

தவத்திரு குன்றக்குடி அடிகளார்

அடிகளார்

பொன்மொழிகள்

தொகுத்தவர்

சாமி. பழனியப்பன்

இளங்கோ பதிப்பகம்
14, உஸ்மான் ரோடு, சென்னை-17.

முதற் பதிப்பு ஆகஸ்டு 1964.

தயாரிப்பு:—ச. சொக்கலிங்கம்

விலை ரூ. 1-00.

பாரதம் பிரஸ் 14, உஸ்மான் ரோடு சென்னை-17.

பதிப்புரை

தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களை தமிழ்நாட்டில் மட்டும் அல்ல உலக முழுதும் உள்ள தமிழர்கள், அவர்களை நன்கு அறிவார்கள்.

தவத்திரு அடிகளார் அவர்கள் சைவ சமயத்தில் உள்ள அரும் பெரும் கருத்துக்களை உள்ளது உள்ளபடி மக்களுக்கு எடுத்துரைப்பதின் மூலம் 'சமய உலகில் தலைமைப் பீடத்தைப் பெற்றுள்ளார்கள். அவர்கள் மக்களோடு கலந்து உறவாடி, மக்களின் அன்றாட அத்தியாவசியத் தேவைகள் கிடைக்கச் செய்வதில், சமயவாதிகள் ஈடுபடவேண்டும் என்பதில் கண்ணுங் கருத்துமாக இருந்து, உழைத்தும் வருகிறார்கள்.

''சமயம் மனித இன வாழ்வுக்கு முட்டுக் கட்டையல்ல'' ''சமயமே வாழ்க்கை—வாழ்க்கையே சமயம்; சமயம் வாழ்வுக்குப் பயன்படுவது—வாழ்க்கையை

வளப்படுத்துவது'' என்பன போன்ற பற்பல சமய உண்மைகளை மக்களிடையே பரப்புவதோடு மட்டும் நில்லாமல், எத்துணையோ அறக் கட்டளைகளை நிறுவி, தொடக்கப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள், புண்ணிய விடுதிகள் முதலியனவற்றை நடத்தி வருவது தமிழ் மக்கள் பெற்ற பேறு.

பழமைக்கும், புதுமைக்கும் இடையே இணைப்புக் கொடுத்து புதுமையும், பொதுவும் உடைய அருள் நெறி நிற்கும் சமுதாயத்தைக் காணும் முயற்சியே நம் முயற்சி, என்று கூறும் தவத்திரு அடிகளார் அவர்களின் கருத்துக்களை, புத்தக உருவில் அமைக்கும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட எனக்கு வாய்ப்பளித்த தவத்திரு அடிகளார் அவர்களுக்கு எனது பணிவான வணக்கங்கள்.

தவத்திரு அடிகளார் அவர்களிடம் பணியாற்றும் பேறு பெற்ற திரு. சாமி பழனியப்பன் அவர்கள், பொன்மொழிகளைத் தொகுத்துத் தந்துள்ளார்கள். அவர்களுக்கு என் நன்றி.

ச. சொக்கலிங்கம்.

அடிகளார்

பொன்மொழிகள்

சமயம்

சமயம்

1. மானிட சமுதாயம் ஒரு குடும்பம். அந்தக் குடும்பத்திற்கு தாயும் தந்தையும் ஈசன் என்ற கருத்து மக்களிடையே பரவப்பரவ ஒப்பற்ற ஒருலகம் மலரும்.

2. வாழ்வைத் தொடாத சமயம் ஒரு பொழுதும் பயன்தருவதில்லை. சமயச் சார்பற்ற உலகியல் உறுதி பெறாது. அதுமட்டுமின்றி பரிபூரண நன்மையாகவும் இருக்கமுடியாது. அது போலவே சமுதாயத் தொடர்பில்லாத சமயம் வளம் பெற்று வாழ்வதில்லை. அத்தகு சமயம் கால வெள்ளத்தில் மறைந்து போகும்.

3. சமுதாயத்தைத் தழுவிய சமயமும், சமயத்தைத் தழுவியிருக்கும் சமுதாயமும் இன்றைக்குத் தேவை.

4. தலைமை, நாடிப்பெறக் கூடியதல்ல; தகுதியுடையார்மாட்டு தலைமை வந்தடையும்.

5. வாழ்க்கையின் ஒரு பகுதி சமயமல்ல; வாழ்க்கையே சமயமாகும். மாலைவேளையில்-

கோயில் செல்வதும், திருவிழாக்கள் எடுத்துத் திருக்கோயில் வலம் வருவதும் மட்டுமே சமய மாகாது; அது சமயத்தின் ஒரு பகுதியே ஆகும்.

6. உணவு அப்படியே உடலுக்குக் குருதி யாகா; ஆனால் உணவு ரத்தமாக மாறுகிறது. அதுபோல சடங்குகளே சமயம் ஆகா. அவை களின் சாரமே—அவற்றைக்கொண்டு ஏற்படும் பயனே சமயமாகும்.

7. திருநீறு அணிவது சமயத்தின் ஒரு சடங்கு. அதன் பயனே சமயத்தின் ஆக்கம். மனிதனின் மனம் எனும் காட்டிலும் சிங்கம் புலி கரடிகள் வாழலாம். அக்கொடிய கருத்துக்கள் நெஞ்சத்தில் வாழாமல் தூய்மைப்படுத்தவே தூய்மையான வெண்ணீறு பூசுகிறோம்.

8. சமயம் நிரந்தரமான உயிரோட்டமான ஓர் தத்துவம். அதற்கு எப்போதும் அழிவு ஏற் பட்டதில்லை. கால நிலைமைகளின் விளைவாகச் சிலபோது மறைந்தது போலத் தோற்றமளிக்கக் கூடும். ஆனால் அது மறைவதில்லை. தத்துவத் திற்கு அழிவே கிடையாது. உலகியல் எண்ணங் கள் அதிகமாகி வாழ்வியல் வெப்பமடைந்து போகும் காலத்து, சமயம் மக்களின் காட்சிக்கு அல்லது வாழ்க்கைக்கு வருவதில்லை. உலகியல் வெப்பம் தணிந்தபிறகு சமயம் மக்கள் வாழ்க் கைக்கு மீண்டும் வருகிறது. இதுவே சமய நெறிச் சூழல் வரலாறு.

9. வில்லியம் வேர்ட்ஸ் ஓர்த் இயற்கை எழில் களை வியந்து பாடிய பாடல்களைவிட திருஞான சம்பந்தரின் இயற்கை எழிற் கவிதைகள், அனுபவத்திற்கு உரியனவாக இருக்கின்றன.

10. சமுதாயத்தின் அன்றாடப் பிரச்சினை களில் அக்கறை காட்டித்தீர்த்து வைக்கவேண்டிய பொறுப்பு மற்ற எல்லாத் துறைகளைவிட சமயச் சார்புக்கே அதிகப் பொறுப்பு இருக்கிறது.

11. கையில் உறைபோட்டு மின்சாரத்தைத் தொட்டால் அது உடலில் பாயாது; அதுபோல நெஞ்சு கலந்த பக்தியுடன் உலகியலில் வாழ்வு நடத்தினால் அவற்றின் தீமைகள் நம்மை அணுகாது.

12. உழைப்பாளி உழைக்கிறான்; கடுமை யாக உழைக்கிறான். உழைப்பின் முடிவு நேரத் தில் அவனுடைய உடம்பு ஓய்வுகேட்கிறது. அலுப்படைந்த உடம்பு அமைதி கேட்கிறது. இந்த நேரத்தில் அந்த உழைப்பாளி தனது உடம் பிற்கு ஆறுதலும்—ஓய்வும் தருவதற்காக என்ன செய்கிறான்? தன்னுடைய உடம்பை ஒன்றின் மீது சாத்துகிறான். அலாதியாகக் கிடத்துகிறான்- அதாவது படுக்கிறான். அங்ஙனம் படுத்து உடல் தனது செயல்பாடுகளைத் துறக்கும்படிச் செய் கிறான். சுற்றுச் சூழலை மறந்து உறங்குகிறான். உறங்கியெழும்போது உடல், களைப்பின்றி புது குதுகுதுப்புடன் விளங்குகிறது. அதுபோல உயிர்,வினை வழிப்பட்ட சுழற்சியில் சிக்கிச் செயல்

பட்டு அலுப்படைகிறது. அத்தகைய உயிருக்கு ஆறுதலும் அமைதியும் தேவைப்படுகிறது. ஆறுதல் வேண்டி நிற்கும் உயிர் திருவருளிலே தம்முடையஉயிரைச் சார்த்தி அறிதுயில்கொள்வதன் மூலம் உயிர் அலுப்பு நீங்கி ஆறுதல் பெறுகிறது. அமைதி பெறுகிறது; புதுமை பெறுகிறது; பொலிவு பெறுகிறது; இன்பம் பெறுகிறது.

13. மனிதனுடைய வாழ்க்கையைச் செம்மைப் படுத்தவே சமயம் பயன்பட்டது பண்டைக் காலத்தில். ஆனால் இடைக் காலத்தில் தமிழர்கள் தூங்கிப் போனதால் சமயத்தின் உண்மை நிலை மாறிவிட்டது.

14. பல நல்ல அறங்களை நல்ல முறையில் ஒன்றுபடுத்தி மனிதன் வாழ வழி வகுத்துத் தருகின்ற கொள்கைக்குத்தான் சமயம் என்று பெயர்.

15. உலகியல் ஏட்டில் இன்பவட்டம் வரைய கடவுள் நம்பிக்கை என்றமையத்தைக் கொண்டு, கவராயத்தின் மற்றொரு முனையில் முயற்சி என்ற எழுதுகோலைப் பொருத்தி வரைந்தால்தான் உண்மையான வட்டம் வரைய முடியும்.

16. இருகண்கள் இருப்பதுபோல சைவத்திற்கு, வடமொழியும் தமிழும் இருக்கின்றன. இவற்றுள் ஒன்றாகிய தமிழ்மொழி என்னும் கண்ணை மூடிவிட்டு மற்றதை மட்டும் திறப்பது என்பது முறையற்ற செயலாகும்.

17. மணிக்கூண்டின் அடிக்குண்டு ஆடி அசைந்தாலும் கடிகாரத்தில் முட்கம்பிகள் நகராது இருந்தால் காலத்தைக் கணக்கிட முடியாது. அதுபோல் ஆராதனைகள் நடைபெற்றும் வழிபாடு செய்பவனது இதயத்தை அவ்வழிபாடு தொடாதுவிடின் அதனால் என்னபயன்?

18. பழமைக்கும் புதுமைக்கும் இடையே இணைப்புக் கொடுத்து புதுமையும் பொலிவுமுடைய அருள்நெறி நிற்கும் ஒரு சமுதாயத்தைக் காணும் முயற்சியே நம்முடைய முயற்சி.

19. தெளிந்த சிந்தையும் தேர்ந்த உணர்வும், ஓர்ந்த உள்ளமும் தரவல்ல கடவுட் திருப்பணியில், ஊக்கம் குன்றாது தொடர்ந்து செயற்படுவதின் மூலமே புதுமையும் பொதுமையும் பூத்துக்குலுங்கும்.

20. நம் இதயம் இறைவனுடைய வழிபாட்டிற்கு; நம் அறிவு ஆற்றல் அத்தனையும் மனிதகுல நல் வாழ்வுத் திருப்பணிக்கே.

21. செம்பொருளாக முழுமைபெற்று எல்லாமாகி விளங்கும் இறைவன் மொழிகளுக்கெல்லாம் அப்பாற்பட்டவன்.

22. சிந்தனை திருந்தினால் ஒழிய செயல் திருந்தவழியில்லை. சிந்தனையைத் திருத்த சட்டத்திற்கு வலிமையில்லை. சமயமே சிந்தனையைத் திருத்துவதாகும். கை கால்கள் வெட்டுப்பட்டால் ஆற்றிவிடலாம். நெஞ்சில் நஞ்சு கலந்தால் என்னாகும்? செயலின் நெஞ்சு சிந்தனைதானே.

23. சமுதாயத்தின் அன்றாடப் பிரச்னைகளில் அக்கறை காட்டித் தீர்த்துவைக்கவேண்டிய பொறுப்பு மற்ற எல்லாத் துறைகளை விட சமயச்சார்புக்கே அதிகமாகப் பொறுப்பு இருக்கிறது.

24. பைபிளைப் பாடிப் பிச்சை கேட்கும் கிறித்துவரையோ, குர்ஆனைப் பாடி கும்பிவளர்க்கும் இஸ்லாமியரையோ காண முடியாத காலத்தில், தேவார திருவாசகங்களையும், திவ்வியப் பிரபந்தங்களையும் பாடி இரந்துண்ணும்கோரம் நம் கண்களிலே கலக்கத்தை ஊட்டின.

25. பசியால் வாடும் ஏழைக்கு இறைவன் உணவின் வடிவமாகவே காட்சி தருகிறான்.

26. வாழ்வின் வறுமையையும், துயரத்தையும் துடைத்தெறிய முதலிலே முயற்சியுங்கள். பசி தீர்ந்த மனிதனிடத்தில் பரமனைப் பற்றிய செய்திகளைப் பேசுங்கள். அப்பொழுதுதான் செவிசாய்த்துக் கேட்பான்.

27. சமயம் என்பது ஒரு பரிபூரணக் கடமை உணர்ச்சியினுடைய மறுபெயரே யாகும். சமுதாயத்திற்குத் தலைமை தாங்கிச் சமுதாயத்தின் எல்லா வேலைகளையும் செய்யவேண்டிய பொறுப்பும் கடமையும் சமய உலகுக்குண்டு. தனி மனித வாழ்விலும் சமுதாயப் பொது வாழ்விலும் இன்ப அன்பைப் பெருக்கிச் சமுதாயத்தை வாழவைப்பதே சமயத்தின் கடமை.

28. சமுதாயத்தை அணைத்து, அழைத்துச் செல்லும் சமயமே சமயமாகும்.

29. தமிழகம் தெய்வ மணம் கமழும் திரு நாடு. இறைமணம் கமழும் இன்பத்திருநாடு. அருமைத் தமிழும் அருள் நெறியும் இணைந்து வாழ்ந்த தமிழ்நாடு.

30. முதலாளித்துவம் கடவுளையே விலைக்கு வாங்கும் அளவுக்குச் சக்தி படைத்தது. அது தன்னுடைய சுரண்டல் கொள்கைக்கு மதத்தை ஒரு கருவியாக ஆக்கிக்கொண்டது. அப்பொழுதுதான் "புண்ணியத்தின் பயன் பணக்காரன்; பாவத்தின் பயன் ஏழை" என்ற தத்துவம் தோன்றியது.

31. இறைவன் நற்குணங்களில் உருவானவன். அவன் நன்றுடையான்-தீயதிலான்-விருப்பு வெறுப்பற்றவன்-அன்புருவானவன்.

32. வடவர் சமயமும், மேனாட்டுச் சமயமும் பயத்தின் அடிப்படையில் பிறந்தனவாகும். இடிக்கும், மின்னலுக்கும் பயந்து அவற்றை அவர்கள் வழிபட்டார்கள்.

33. தமிழர் சமயம்-சைவ சித்தாந்த சமயம் நன்றியுணர்ச்சியின் அடிப்படையில் எழுந்தது. மனிதன் வாழ இந்தப் பரந்த உலகையும் நுகர்ச்சிப் பொருள்களையும் படைத்தளித்த இறைவனுக்கு - முழுமுதலுக்கு நன்றி செலுத்தவேண்டும் என்ற அடிப்படையில் பிறந்ததுதான், நமது சைவசமயம்.

34. அன்பு நெறியில் - அருள் நெறியில் நம்மை வழிப்படுத்துவதுதான் வழிபாடு.

35. கடவுளை நம்பமாட்டேன் என்பது பைத்தியக்காரத்தனம் ஆகும். நம்பாதவனிடம் காட்ட முயல்வது பயித்தியக்காரத்தனத்திலும் பைத்தியக்காரத்தனம்.

36. மதத்தை சீர்திருத்த விரும்புவோர் மிகப்பலர். அவர்கள், முதல் முதலில் உண்மைச் சமயம் எது? இடைச்சரக்கு எது? என்பதை நன்கறிந்திருக்கவேண்டும். இன்றேல் பயிர் எது? களை எது? என்று அறியாதவன் பயிர்களையும் பிடுங்கி எறிவது, போலாகும்.

37. சட்டம் உன்னுடைய செயலைத்தான் திருத்தும். உள்ளத்தைத் திருத்தாது. ஆணி வேரை வெட்டி எறியாது, கிளைகளை மட்டும் வெட்டிவிட்டால் மரம் துளிர்க்காது போய் விடுமா?

38. நமது சமுதாயம் மறுமலர்ச்சி பெற, உண்மையான தத்துவ சிந்தனையும், பரந்த நோக்கமுள்ள சமய உணர்வும் அவசியம். சமயம் என்பது மனிதனுடைய இதயத்தில் அரும்புகிறது.

39. நாம் வழிபாடு செய்தாலும் செய்யாது போனாலும் அருள் சுரப்பவன் இறைவன்.

40. நெஞ்சைத் தொடுகின்ற — உள்ளத்தைத் தொட்டு உலுக்குகின்ற தன்மை உடையதே வழிபாடு.

41. உள்ளத்தைத் தொடாத வழிபாடு, வழிபாடு என்று ஒத்துக்கொள்ள முடியாது.

42. பீடும் பெருமையும், ஈடும் எடுப்பும் அற்று விளங்கும் தமிழ் வழிபாடே இன்று வேண்டப்படுவது.

43. பண்பும் அன்பும், அறிவும் அருளும் கொண்டு, தூய நெஞ்சுடன் இறைவனை ஏத்தி வாழும் வாழ்வே செல்வ வாழ்வு. அதுவே சிறந்த செல்வம்.

44. வளர்ந்துவரும் அறிவியல் உலகில் பிற்போக்கான சமயமும், சமயக் கொள்கையும் கெட்டுத்தான் போகும். அனுபவரீதியான வாழ்க்கையோடு ஒட்டி உறவாடுகின்ற சமயமும் அதன் கொள்கையுமே நிலைத்து நிற்கும். காரணம், அது எண்ணத்தோடு, மன உணர்ச்சியோடு, வாழ்க்கை அனுபவத்தோடு ஒட்டி இருப்பதே ஆகும்.

45. தருதல் வேறு. புணர்த்தல் வேறு. வேண்டும் பொழுது கொடுப்பது தருதல். வேண்டும் என்று எண்ணுதபோதும் வேண்டாம் என்று மறுக்கும்போதும் வலியக் கொடுப்பதே புணர்த்தல்; சுந்தரர் விரும்பியபடி பொன்னும் பொருளும் கொடுத்தான். அவர் விரும்பாமலேயே போகமும் வீடும் புணர்த்தான் இறைவன்.

46. மின்சாரம் எங்கள் ஊருக்கு வரவேண்டும்—எங்கள் தெருவுக்கு வரவேண்டும்—

எங்கள் வீட்டுக்கு வரவேண்டும் என்று விரும்பாதவர் இல்லை. அதுபோலவே திருவருளையும் பெற வேண்டும் என்ற எழுச்சி உள்ளத்தில் எழ வேண்டும்.

47. திருவருட் சக்திவாய்ந்தவர்கள் ஏதோ திடீரென்று தோன்றி மறைந்தவர்கள் என்று கூற முடியாது. அவர்கள் நாட்டில் பிறந்தார்கள்—வாழ்ந்தார்கள்—நம்மோடு நடமாடினார்கள்.

48. சமதர்ம சமுதாயம் ஏற்படுத்துவதே சைவ சமயத்தின் நோக்கம். உலகம் முழுவதற்கும் தலைவன், தந்தை, இறைவன். அவனே வழிப்பட்ட உலகத்தில் எந்த விதமான ஏற்றத் தாழ்வுக்கும் இடமில்லை. உலகத்தின் வைப்புக்கள் அனைத்தும் பொது. அதை எல்லோரும் அனுபவிக்க வேண்டும். இதுவே உயர்ந்த சமய ஒழுங்கு.

49. சமயம், பொதுமை நலம் பேணுவதற்குத் தடையாக இல்லை. அதற்கு மாறாக சமயம் பொதுமை நலம் பேணத் தூண்டுகிறது.

50. சடங்குகள் மிகுதியாக வளர வளர ஆபத்துக்களும் வளரும்.

51. நாவுக்கரசரும் ஞானசம்பந்தரும் சுந்தரரும் ஏற்ற நின்ற-தொண்டுளங் கொண்ட சமயமே—நெஞ்சைத் தொட்டு வளப்படுத்தும் சமயமே, இன்றைய நூற்றாண்டுக்கும் எதிர்காலத்துக்கும் தேவை.

52. சாதாரண செப்புக் கம்பியைத் தொட்டால் அது நம்மை இழுப்பதில்லை. ஆனால் அதன் ஊடே மின்சாரம் பாயும்போது நம்மை இழுத்து உணரவைக்கும் ஆற்றல் பெறுகிறது. தோற்றத்தால் அது பழைய செப்புக் கம்பிபோல் இருந்தாலும் தொட்டாலன்றித் தெரிவதில்லை. சாதாரண மனிதன் ஒருவனுக்குப் பிறரைத் தன் வயப்படுத்தும்-தன்வயப்படுத்தி நடக்கச் செய்யும் ஆற்றல் இல்லை. இறைவனின் திருவருட் சக்திபெற்றவர் பிறரைத் தன்வயப்படுத்தித் தன்னைப்போலவே அவரையும் ஆக்கும் ஆற்றலையும், நினைத்ததைச் செய்து முடிக்கும் ஆற்றலும் திறமையும் பெறுகிறார்கள்.

53. உலகச் சமயமாக இருக்கக்கூடிய பெருமையும் சிறப்பும் தகுதியும் நம் சைவ சமயத்துக்கே உண்டு.

54. சித்தாந்தம் என்றால் முடிந்த முடிபு என்பது பொருள். அது என்றும் மாற்ற முடியாதது. மாற்றப்பட வேண்டாதது. எக்காலத்துக்கும் ஏற்றது. நாடு, மொழி, இன வேறுபாடு இன்றி வளர்ந்த சமயம் சைவ சித்தாந்த சமயம்.

55. சைவ நன்னெறி நீதிவழிப்பட்டது. நீதியை அடிப்படையாகக் கொண்டது. நிலையான நீதியை, நெறி முறையை எடுத்துக் கூறி மக்கள் உள்ளத்தைப் பண்படுத்துவது.

56. சமயம் மனித இன வாழ்வுக்கு முட்டுக் கட்டை அல்ல. அது வாழ்வுக்குப் பயன்படுவது-வாழ்க்கையை வளப்படுத்துவது.

57. தண்ணீர், வான் ஆகியவற்றின் பெயர் நாட்டுக்கு நாடு மொழியால் வேறுபட்டிருந்தாலும் அதன் இயல்பு ஒன்ருவதுபோல, சமயங்கள் பலவாகத் தோற்றமளித்தாலும் அவற்றின் அடிப்படைக் கொள்கை - தத்துவம் ஒன்றுதான்.

58. அறிவிலே தெளிவைக் காட்டி அன்பியலிலே ஆழ்த்தி அகவாழ்வைத் தொட்டு-அக வாழ்வை வளர்க்கும் நெறியே சமயநெறி.

59. அகவாழ்வோடு இணையாத, பிணையாத சமயநெறி சோளக் கொல்லைப் பொம்மையைப் போன்றதாகும்.

60. மதத்தை அல்லது சமயத்தைப் பின் பற்றுகிறவர்கள் விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டவர்களாக இருக்கவேண்டும்.

61. திருக்கோயில் மட்டும் பொலிவுடன் திகழ்ந்தால் போதுமா? திருக்கோயிலைச் சுற்றி வாழ்கின்ற மக்கள் சமுதாயம், அறியாமை என்னும் இருளில் மூழ்கி இருந்தால், ஒளியுறும் அறிவான ஆண்டவனைக் காண முடியுமா?

62. இந்த வாழ்க்கை வறண்ட பாலைவனமும் அல்ல; அல்லது பாலைவனமாக்கிக் கொள்வதற்காக இறைவனுல் கொடுக்கப்பட்டதுமல்ல; வாழ்க்கை இறைவன் திருவருளால் கிடைத்த ஒரு

பெரிய கொடை ஆகும். வையத்துள் வாழ் வாங்கு வாழ்ந்து திருவருள் நலம்பெற முயலு வதே சிறந்த வாழ்க்கை என கருதப்பெறும்.

63. புரியாத-புதிரான மனத்தை ஒழுங்கு படுத்த வழிபாடு போன்ற வேறு சாதனமே இல்லை. மனிதனின் இறுகிய-பாறைபோன்ற மனத்தை பிசைந்து, மலர்போல மென்மை யுடையதாக்கி, அதற்குத் தூய நறுமணமும் ஊட்டுகிற தனிப்பெரும் சக்தி வழிப்பாட்டிற்கு உண்டு.

64. உதவிபெற்று வாழ்ந்தோர், திரும்ப உதவி செய்யவேண்டியது நீதி நியாயம்; மனிதத் தன்மையும் கூட.

65. நம்முடைய நாட்டிலும் நடைமுறை சமயமும் தத்துவமும் வேறுபட்டிருக்கலாம். நாம் இங்கு காப்பாற்ற நினைப்பது மனிதனை மனித னாக வாழவைக்கும் உண்மைச் சமயத்தையே ஆகும்.

66. அரசியலில் சட்டம் இருப்பினும் தவறு கள் எப்படிக் குறையவில்லையோ, அதுபோலவே தூய சமய வாழ்வு மேற்கொண்டவர்களிடத்தும் கூடச் சூழ்நிலை காரணமாக தவறுகள் நிகழலாம்; நிகழக்கூடும். அவ்வப்போது சூழ்நிலையை மாற்றி அமைத்துத் தவறுதல்களைத் திருத்தி மனித வாழ்வை ஆக்குவதே சமயநெறியின் கடமை.

67. அரசு வளையும்போதும் அரசியல்வாதி ஒருவன் தட்டிக் கேட்கமாட்டான். கேட்டால்

பட்டம்-பதவி-சிறப்பு-உயர்வு கிடைக்காது. அப்போது தட்டிக்கேட்கும் தன்மை - நெஞ்சுரம் அருளியல் ஒன்றுக்கே உண்டு.

68. வாழ்க்கையில் தேவை வேறு; இலட்சியம் வேறு. பொன், பொருள், போகம், புகழ், அறிவு இவை எல்லாம் தேவைகள்; ஆனல் இலட்சியமோ நிரந்தரமாகத் துன்பங்களிலிருந்து விடுதலே பெற்று இன்பத்தை பெறுவதே ஆகும்.

69. அருளியலும்-அறிவியலும் ஒரே பாதையை நோக்கிச் செல்லுகின்ற பயணந் தான்.

70. வாழ்க்கைப்பிரயாணம் ஒரு நூறு மைல் என்று வைத்துக்கொண்டால், 99-வது மைல் வரை போகின்றவனுக்கு விஞ்ஞானி என்று பெயர்-அறிவியல் மேதை என்று பெயர். 100-வது மைலேயும் கடந்திருக்கின்ற மனிதனுக்கு அருளியல் மேதை என்று பெயர்.

71. இயற்கைப் பூஞ்சோலேயிலே வாழ்க்கை என்ற உலகத்திலே விஞ்ஞானிகூட மெஞ்ஞானத் துறைக்குப் போகப் பயின்றுகொண்டிக்கின்ருன்.

72. விஞ்ஞானம், மெஞ்ஞானம், என்ற இரண்டையும் பார்க்கின்றபொழுது நமக்கு அவை வேறு வேருகத் தோன்றவில்லே.

73. உள்ளத்துச் செழுமை பொருட் செழுமையாக வரமுடியும். பொருட் செழுமையால் உள்ளத்துச் செழுமை மலர முடியும்.

74. வயலுக்கு வரப்பு இன்றியமையாதது; எனினும் வரப்பே வயலாகிவிடாதல்லவா, அது போலவே, சமயத்துக்குச் சடங்குகள் இருக்கின்றன-ஆனுல்சடங்குகளே சமயமாகாது.சமயம் வளரச் சடங்குகள் பயன்படும். அவ்வளவுதான்.

75. தண்நிலவு குடிசையிலும் பொழிகிறது. மாளிகையிலும் பொழிகிறது. அது வேறுபாடின்றி எங்கும் பொழிகிறது. அதுபோல்தான் உலகியலும் பொதுமையாக இருக்க வேண்டும். இதுவே சமய நியதியின் அடிப்படைத் தத்துவம்.

76. தேன் பிணியாளருக்கு மருந்து; மற்றவர்களுக்கு உணவு; திருவாசகத்தேன் வினைத் தொடர்புள்ளவர்களுக்கு மருந்து; சிவன் முத்தர்களுக்கு உணவு.

77. திருமுறைகள் செந்தமிழ்ச் சுவையும் சிவமணமும் செறிந்து திகழ்வன. அவை பழகப் பழக சுவையூட்டும். பைந்தமிழ் பனுவல்கள் இறைவனை வழிபடத் தமிழில் வழி வகுத்தனர், திருமுறைகளை அருளிய பெரியவர்கள்.

78. நான் வேறு எனது நிழல் வேறல்ல. இது உடல் அளவில் அமைந்த தத்துவம். அது போலவே உயிரை அடியொற்றிய நிழலாகவே இறைவன் விளங்குகிருன். தன் நிழலைத்தேடி ஓடுவது பைத்தியக்காரத்தனம். தன்னுள் உயிருக்குயிரான இறைவனை, நினைந்து உணர்ந்து அனுபவிக்க முடியாதவன் எங்கோ இருப்பதாகத்

தேடி ஓடி அலேவது அதனினும் பைத்தியக்காரத் தனம்.

79. இந்நாட்டில் பொய்யாக எழுதப்பட்ட சில புராணங்கள் சாதிக்கு ஆதரவாக இருக்கின்றனவேயன்றிச் சமயங்கள், சாதிக்கு ஆதரவாக இல்லை என்று உறுதியாகச் சொல்லலாம்.

80. "மாசில் வீணையும், மாலே மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும் போல இறைத் தன்மையும் அவனது அருட் கொடைகளும் பொதுவானவை.

81. கடவுள் வாழ்த்துப் பொருள் அல்ல—வாழ்வுப் பொருள்.

82. அறிவினுலே ஓரோர் சமயம் அல்லல் வர முடியும்; அறிவு சில சமயங்களிலே மறக்கத் தூண்டும்; அறிவு சில சமயங்களிலே அகங்காரத்தைத் தூண்டும். ஆனுல்அருளியல் சார்ந்த ஞானம் இருக்கிறதே அது அடக்கத்தைத்தரும்; பண்பைத் தரும்; அன்பைத் தரும்; ஆக்கத்தைத் தரும்.

83. மனிதனே மனிதனுக வாழவைப்பது தான் மதம்.

84. சமயம் மனித இன வாழ்வுக்கு முட்டுக் கட்டை அல்ல; அது வாழ்வுக்குப் பயன்படுவது —வாழ்க்கையை வளப்படுத்துவது.

85. தண்ணீர், வான் ஆகியவற்றின் பெயர் நாட்டுக்கு நாடு மொழியால் வேறுபட்டிருந்

தாலும் அதன் இயல்பு ஒன்ருவது போல சமயங்கள் பலவாகத் தோற்றமளித்தாலும் அவற்றின் அடிப்படைக் கொள்கை—தத்துவம் ஒன்று தான்.

86. அறிவிலே தெளிவைக் காட்டி-அன்பியலிலே ஆழ்த்தி-அக வாழ்வை வளர்க்கும் நெறியே சமயநெறி.

87. அகவாழ்வோடு இணையாத - பிணையாத சமய நெறி சோளக் கொல்லைப் பொம்மை போன்றதாகும்.

88. கடவுள் நம்பிக்கையும் சமுதாயப் பற்றும் மனித வாழ்வின் அடிப்படை ஒழுக்கங்களாகும்.

89. மலர் போன்றது நமது நெஞ்சம். அது மலரைப் போல் மணமிக்கதாக-தண்மையுடையதாக-வண்ணமுடையதாக விளங்க வேண்டும் என்பதற்காகத்தான் நாம் இறைவனை மலர் தூவி வழிபடுகிறோம்.

90. கடவுளும் சமயமும், மக்களுக்காகவும் மக்களின் நல்வாழ்வுக்காகவும் தான்,

91. தமிழ்வழிபாடு செய்வதையும் திருமுறைகளை ஓதுவதையும் இன்றைய செல்வாக்குப் பெற்றவர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்தால், திருமுறைகளுக்கு என்றே கோயிலெழுப்பி திருமுறைகளையே வழிபடும் புதுமதம் பூக்கலாம்.

92. மனிதன் நடப்பதற்கு இரண்டு கால்களும் தேவைப்படுவது போல மனித வாழ்க்

க்கைக்குக் கடவுள் நம்பிக்கையும், தன்னம்பிக்கை தேவை.

93. நமது வாழ்வில் அன்பு மலரவேண்டும்; அறம் பூக்க வேண்டும்; சந்தனம் முழுமையும் மணப்பது போல நமது உடல் முழுவதும் அன்பு மணம் வீசவேண்டும். அன்பு, அறம் தூய்மை ஈரம் கலந்து பிறர் துயர் கண்டு அழுது உதவி புரிவதே சமயத்தின் உயர்நிலை.

94. அல்லர்படும் நெஞ்சுக்கு அமைதியை, அருளை—அருள் உணர்ச்சியை அமுத மழையாகத் தருவது அருளே.

95. கடவுளுக்காகவா சமயம்? இல்லை நமக்காகவே சமயம் இருக்கிறது. கடவுளுக்கு உலகம் முழுதும் அடிமை. இவ்வுலகமும் மற்ற உலகங்களும் அவரது உடமை. ஆகவே வாழ்த்துவதாலும் வழிபடுவதாலும் அவருக்குப்பயன் கிடையாது. நமக்கே பயன் பல உண்டு. முதலில் வாழ்த்து மூலம் நாம் வாழுகிறோம். வழிபாடு செய்வதன் மூலம் நமது உள்ளத்தை உயர்த்துகிறோம்.

96. இதயத்தை அசைக்கும் தன்மை நெஞ்சு கலந்த வழிபாட்டிற்கே உண்டு. அவ்வழிபாடு எம்மொழியிலும் நடக்கலாம்; தாய்மொழி—இதயத்தை தொடுகிற தமிழ் மொழியில் நடப்பது நலமாகும்.

97. காலத்தையும். எல்லைகளையும் கடந்து நிற்கின்ற ஒரே தலைவன்—இல்லை தந்தை—இல்லை

தாய் அவன் முன்னே குலக் கோத்திரங்கள் ஏது. ஏழை பணக்காரன் என்ற வேற்றுமைகள் ஏது?

98. தன்னம்பிக்கையும், கடவுள் நம்பிக்கையும் நாணயத்தின் இருபுறங்கள் போல.

99. ஆண்டவனை வழிபட விரும்பும் யாரும் ஆலயத்திற்குச் சென்று தாராளமாக வழிபடலாம். இடையிலே தரகர் குறுக்கீடு தேவையில்லை.

100. காலத்தை வென்று நமக்கு நல்லின்பம் பயப்பன யாவும் புதுமையே. அது போல வாழ்க்கைக்குத் தேவையில்லாதனவை — அவை இன்றே முளைத்திருப்பினும், வெறுத்து ஒதுக்கித் தள்ளத்தக்க பழமையே.

101. உப்பு-புளி-மிளகாய் இவைகளை அப்படியே சாப்பிட முடியாது. இவைகளைச் சுவையும்—நலமும் உடையதாக ஆக்கும் கைவண்ணத்திற்குப் பெயரே சமையல். மனிதனைப் பண்புடையவனாக ஆக்கும் தத்துவக் கொள்கைக்குப் பெயர்தான் சமயம்.

102, மலர்த்தேன் உடல் மலம் நீக்கும்; மாணிக்கவாசகரின் திருவாசகத்தேன் உயிர் மலம் நீக்கும்.

103. சமயம் என்றால் ஒரு பரிபூரண வாழ்வு என்று பெயர். மனிதனுடைய உள்ளத்தைத் தொட்டு அவனைப் பக்குவப்படுத்தி, அவனை செழுமையுடைய மனிதனாக்கி, அவனை அன்பு மனிதனாக-அறமனிதனாக மனிதரில் தேவனாக

ஆக்குகின்ற உயர்ந்த பண்பாட்டிற்குத்தான் சமய வாழ்வு என்று பெயர்.

104. மனிதனோடு பேச வாய்; இறைவனோடு பேச இருதயம்.

105. சிவன் கோயிலுக்குச் செல்கிறோம்— உள்ளே நுழைவதற்கு முன் வழியில் நந்தியைக் காண்கிறோம்; வணங்குகிறோம். நாம் மாட்டை வணங்குவதாகக் கூறுவர் ஒரு சிலர். உண்மையிலேயே அது மாடா என்ன! எந்த உருவத்துக்கு பின்னும் ஒரு கருத்து உண்டு. அந்த நந்தி—காளை—அறத்தின் சின்னம்; உழைப்பின் வடிவம்.

106. எலும்பு முறிந்து விட்டால்கூட எண்ணெய்யும், பச்சிலைகளும் இன்ன பிறமருந்துகளும் போட்டு ஒட்டவைக்க முயற்சிக்கிறோம். ஆனால், எண்ணத்தில் வேறுபாடு ஏற்பட்டால் இரு வேறுபட்ட எண்ணமுடையவர்களும் கலந்து பேச முற்படுவதில்லை. கருத்து வேறுபாட்டில் காழ்புக்கு இடமில்லை. கருத்து வேறுபாடு இருந்தாலும், அதைக் கேட்கின்ற மனப் பண்பும், சிந்தித்துச் செயல்படுகின்ற திண்மையும், திறந்த —விரிந்த மனத்தோடு பழகுகின்ற உயரிய பண்பும் பெறுதல் இன்றியமையாதது.

107. பைபிளின் சமயத்தைக் குடிசைகள் தோறும் தூக்கிச் சென்று பரப்புகிறார்களே! அது போல திருவாசகத்தை குடிசைகள் தோறும் தூக்கிச் சென்று "சிவ நெறியை" வளர்க்க வேண்டும் என்ற விழுமிய விருப்பம் தோன்றவேண்டும்.

108. சாதியற்ற சமயவாய்ப்புச் சமுதாயம் அமைக்கும் கொள்கைக்குச் சமயம் முரண்பாடாக இல்லை.

109. இருள் என்னும் ஒளியைக் கண்டதில்லை, ஒளியை ஒளி கொண்டே காணமுடியும்.

110. வாழ்க்கையின் ஒரு பகுதிமட்டும் சமயமல்ல. வாழ்க்கை முழுவதுமே சமயத்தின் சாயல் இருக்க வேண்டும். எப்படி ஒரு உடம்பின் எல்லாப் பகுதிகளிலும், செங்குருதி ஊறுகிறதோ அதுபோலவே வாழ்க்கையில் எல்லா துறைகளிலும் அதாவது சிந்தனை, செயல் எல்லாவற்றிலுமே சமயத்தின் சாயல் வேண்டும்.

111. கடவுள் தன்மை வேறு; புராணங்கள் வேறு; கடவுள் தன்மையை புராணங்களை வைத்தே மட்டும் பார்க்கக்கூடாது.

112. நாலடுக்கு மாளிகையும் நாலாயிரம் ஏக்கர் நிலமுமிருந்தால் அது புண்ணியத்தின் அளவு கோளாக முடியுமா?

113. மனிதனுடைய வாழ்வை—வாழ்வின் அடிப்படையான நெஞ்சைப் பண்படுத்துவது தான் உண்மைச் சமயம்.

114. உயிர் வாழ்வுக்கு மூச்சு இன்றியமையாதது போல நேர்மையான வாழ்வுக்குச் சமயம் இன்றியமையாதது.

115. உயர்ந்த எண்ணங்களை ஊட்டும் சமயம் உயர்ந்த குணங்களைத்தான் வணங்கச் சொல்கிறது.

116. வழிபாட்டிற்கு காதலும், கனிவும், கசிவும் தேவை; இவற்றைத் தரவல்லது நமது தாய்மொழியாகிய தமிழேயாம். எனவே நமக்குத் தமிழில் வழிபாடு வேண்டும்.

117. "தட்டினால் கதவு திறக்கப்படும்" என்பது பிறசமயக் கொள்கை. நம் சமயக் கொள்கை வேறு. நம்முடைய பெருமான் வலிய வந்து நம்முடைய கதவைத் தட்டுகிறான்; நாம் தான் மனத்தை திறக்க மறுக்கிறோம்.

118. அறிவியல் வளர்ந்தால் அருளியல் தளரும் என்று சொல்லுகிறவர்கள் விஞ்ஞானத்தின் இளைஞர்கள், அறிவியல் வளர்ந்தால் அருளியல் போய்விடும் என்று அஞ்சுகிறவர்கள் சமயத் துறையில் மூடநம்பிக்கையுடையவர்கள். இரண்டு பேருமே நாட்டுக்கு நல்லன செய்கிறவர்களல்லர். உழைப்பால் உடல் வலுவடைவதுபோல், வழிபாட்டால் உள்ளம் வலிவும் வனப்பும் பெறும். அன்பு, அருள், கருணை இவற்றை வழிபாட்டால் பெற முடியும்.

119. அறிவியல் இருக்கிறதே அது ஒழுங்காய் முறையாய், வளர வேண்டுமானால் அதற்கு அருளியல் என்ற வேலி தேவைப்படுகிறது.

120. ஓடும் கால்களுக்கு மதமும்—கடவுளும் சங்கிலிகளாக இருக்கக்கூடாது.

121. செவிடனுக்கு இசையின்பம் இல்லை; குருடனுக்கு காட்சியின்பம் இல்லை; இதயமற்றவனுக்கு இறையின்பம் இல்லை.

சமுதாயம்

சமுதாயம்

1. பொறுப்புடன் எழுத்தாளர்கள் என்றும் எழுதவேண்டும். எழுத்தாளர்கள் நடுநிலைமை பிறழாதவர்களாயிருக்க வேண்டும். எழுத்தாளர்கள் நடு நிலைமை தவறினால் சமுதாயம் கெட்டு விடும்.

2. சமுதாய உணர்ச்சியை ஊட்டுவதில் எழுத்தாளர்கள் முழு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டியது முக்கியமாகும்.

3. வாழ்வு என்னும் பயிர் வளர்க்க சொல் லேருழவர்—எழுத்தாளர் முயலவேண்டும். வாழ் விக்கும் பண்பு ஊட்டப் பெறவேண்டும்.

4. பண்பட்ட அறிவு பகைமைக்கு அப்பாற் பட்டது. விவாதத்திற்குட்பட்டதல்ல. விளங்க வைக்கும் தகைமை உடையது.

5. சிந்தனையால் எண்ணத்தால் மாற்ற மடையாத சமுதாயத்தில் செயல்களிலும் மாற்றம் காணுதல் அரிது.

6. நாட்டில் பலரைச் சுரண்டி, சுரண்டிய தில் ஒரு சிறு பகுதியை வறியவர்களுக்கு வழங்கி வள்ளல் என்ற பட்டம் பெறுவது சமத்துவமு மல்ல, தர்மமுமல்ல.

7. உழைத்த உடலின் களைப்பு நீங்கி ஆறு தல் பெறத் தூக்கம்; வாழ்க்கையில் உழலும் உயிரின் களைப்பு நீங்கி ஆறுதல்பெற வழிபாடு.

8. தனி மனிதனுடைய ஒழுக்கத்திற்குச் சமுதாயமும் பொறுப்பேற்கவேண்டும்.

9. ஒழுக்கம் இருவகைப்படும். தனி மனித ஒழுக்கம்; வாழும் சமுதாயத்தோடு கொண்டுள்ள சமுதாய ஒழுக்கம். தனி மனித ஒழுக்கத்தினும் பெரியது சமுதாய ஒழுக்கம்.

10. கோயிலுக்கும்-குடிசைக்கும் இடையே உள்ள தொலைவு குறையவேண்டும்.

11. மனிதவாழ்வுக்கு அறிவு இன்றியமை யாத ஒன்று. வாழ்க்கையை நல்வழிப்படுத்துவது அறிவு. குழப்பத்தினின்றும் தெளிவு தருவது அறிவு. வாழ்வுக்கு ஆக்கம் தருவது அறிவு. வையத்துள் வாழ்வாங்கு வாழவழி காட்டுவது அறிவு.

12. வளரும் சமுதாயத்திற்கு கூட்டல் குறியே தேவை. கழித்தல் குறியல்ல.

13. சமுதாயத்தோடு தொடர்பு கொண்டு சமுதாயத்தை வாழ்விக்கவேண்டும். இம்மையி லேயே சோறும் கூறையும் தரவேண்டும். தொழுத கை துன்பம் துடைக்கவேண்டும். சமு

தாயத்தின் அழுகைக் கண்ணீரை மாற்ற வேண்டும்.

14. இழந்த நாட்களுக்காக வருந்துபவர் எத்தனைப் பேர் இருக்கிறார்கள் இந்த உலகத்தில்?

15. உலக நியதியில் அழிவுக் கொள்கைக்கு இடம் இல்லை; மாற்றத்திற்கும் வளர்ச்சிக்குமே இடம் உண்டு.

16. "நமக்கு நேரம் போகவில்லையே" என்று வருந்துகிறவர்கள், சமுதாயத்தின் முதல் பகைவர்கள்.

17. சாதி தமிழுக்குப் பெரும் பகை. இந்த நாட்டில் 19 ஆயிரத்துச் சொச்சம் சாதிகள் இருக்கின்றன. என்னைப்பொறுத்தவரை "சாதி" என்பதே அப்பட்டமான பித்தலாட்டம் என்று தான் நான் கருதுகிறேன். வானவெளியில் சிலர் பறக்கிற இந்தக் காலத்திலும் இது ஒரு பிரச்னையா?

18. கலை-நாட்டின் சமுதாய நிலையை தூக்கிப் பிடிக்கும் சக்தி படைத்தது. வாழ்வு உயர்வுக்காகக் கலை பயன்படாமல் தொழிலுக் காக என்று ஆகியதால் இன்று உண்மைக் கலையைக் காண முடியவில்லை.

19. பழமையை அறிய என்ன அளவுகோல் கொண்டுள்ளார்கள் என்பதை அறியவேண்டும். பழமைக்கும் புதுமைக்கும் காலவரையறை கிடை யாது. 2000 ஆண்டுகளுக்கு முன் தோன்றிய திருக்குறளை பழமையானது என்று கூறிவிட

முடியாது. அதுபோல் இன்று தோன்றியதெல்லாம் புதுமை ஆகிவிடாது. நூலின்-கருத்தின் வளத்தை வைத்தே தீர்மானிக்கப் பெறுதல் வேண்டும்.

20. ஒரு ரூபாய் காணுமற்போனுல் வருத்தப்படுகிருேம். இழந்த பணத்தை மீண்டும் சம்பாதித்துக் கொள்ளலாம். ஆனுல் கழிந்த நாள்-இழந்த நாள் மீண்டும் வாழ்வில் வரக்கூடியதா?

21. உழைக்கும் சக்தி படைத்தவர்களின் முயற்சியினைப் பொறுத்தே நாட்டுவளம் அமைகிறது.

22. உணவுக்குத் தக்கபடி உடல் வலுப் பெறுகிறது; எண்ணத்திற்குத் தக்கபடி வாழ்வு அமைகிறது. எனவே, எப்போதும் நல்லனவே எண்ணி, நல்லனவே செய்து வாழவேண்டும். "தீயாரைக் காண்பதும் தீதே' என்பது தன்னம்பிக்கை இல்லாதவர்களுக்குப் பாடியது என்றே கருதவேண்டியிருக்கிறது. கெட்டவர்கள் என்று எவரையும் ஒதுக்கக் கூடாது என்று கருதுகிறவன் நான்.

23. உலகத்தோடு உறவாடி வாழ்ந்து தனிமையைக் காப்பாற்றிக்கொள்வதில் தான் பெருமையுண்டு. தனித்திருந்து-பிரிந்து வாழ்ந்து தனித்துவத்தைக் காப்பாற்றிக்கொள்வதில் ஏதும் பெருமையில்லை.

24. தமிழன் தமிழனைக் கண்டால் தமிழில் பேசவேண்டும். தமிழனுக்கு எழுதும்போது தமிழில் எழுதவேண்டும்.

25. நம் நாட்டிலே இன்று அவநம்பிக்கை உலவுவதற்குக் காரணம், நாம் படிக்கிற படிப்புக்கும், சமுதாய அமைப்புக்கும் தொடர்பில்லாமலிருப்பதுதான்.

26. நாளைக்கு என்று ஏதாவதொன்றை வைப்பவன்தான் முதற் திருடன்.

27. பணக்காரனாக, பேச்சாளனாக, அரசியல்வாதியாக, ஏன் முனிவராகக்கூட ஆகிவிடலாம். ஆனால் பிறர் வாழ்வில்தான் தமது வாழ்வும் வளமும் உள்ளது என்ற நல்ல எண்ணத்தை உடனே பெற முடியாது.

28. என்றும் உள்ள எண்ணையும் எழுத்தையும் சொல்லிக் கொடுப்பது படிப்பு. ஆழமாக நெஞ்சத்தில் கருத்தைப் புகுத்துவது கல்வி. படிப்பு மூளைக்கு வேலை கொடுப்பது. கல்வி இருதயத்திற்கு வேலை கொடுப்பது ஆகும்.

29. காந்தியடிகளின் கற்பனைப்படி வறுமையற்ற நேர்மை காணும் சமுதாயத்தைப் படைக்க ஆசிரியர்களால்தான் முடியும். அர்ச்சகர் தொழிலைக் காட்டிலும் ஆசிரியர் தொழிலே புனிதமானது தானே?

30. மேன்மேலும் பலருடன் நட்புக்கொள்ள வேண்டும் என்று விரும்புவதைக் காட்டிலும் இதுவரை நட்பினராகக் கொண்ட சிறந்த நட்பினரைப் போற்றி வாழ்வது போதுமானது.

31. தனிமனிதனுக்கு ஒரு கேடு வரும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கலாம். சமு

தாயத்திற்கு கேடு வரும்போது பொறுத்துக் கொள்ள முடியுமா?

32. ஒப்புரவு பற்றித் தீவிரமாகப் பேசுகிற நாம், பல வழிகளில் ஒருவருக்கொருவர் முரண் பட்டிருக்கும்போது நமது பண்பட்ட இலக்கியம் மனித வாழ்க்கையில் சிரணிக்கவில்லே என்றுதான் நினைக்கவேண்டியிருக்கிறது.

33. உலேயில் போட்டதும் ஒரே கொதியில் வெந்துவிடும் அரிசியைப்போல எதற்கும் சீக்கிரம் கும்பிடு போட்டுவிடக்கூடாது. ஒரு கொதி சோற்ருல் உரிய பயன் கிடைப்பதில்லே. நின்று வேகும் அரிசிதான் நல்லது. அதைப்போல தமி ழர்கள் எதையும் ஆழமாக அகலமாகச் சிந்தித்துப் பிறகு ஏற்றுக்கொள்ளவேண்டும்.

34. சாதிக்கும் - சமயத்திற்கும் சம்பந்த மில்லே. சில ஆதிக்கக்காரர்கள்-மக்களேச் சுரண்டிச் சுகவாழ்வு வாழும் நோக்கமுடையவர்கள்தான் சாதியை உண்டாக்கிஞர்கள்.

35. மாறுபட்ட கருத்தை மறுக்கலாம். அல்லது மாற்ற முயற்சிக்கலாம். அதுதான் அறிவுக்குப் பொருத்தமானது. அதற்குமாருக மாறுபட்ட கருத்துடையோரையே பகைப்பது என்பது பண்பாட்டிற்கு உகந்ததாகாது.

36. மாறுபட்ட கருத்துடையோருடன் கலந்து உரையாடுவதின் மூலம் அவர்களுடைய கருத்தையும் மாற்றி அமைக்க முடியும்.

37. சமுதாயத்தில் சாதி, இன வேறுபாடு அற்ற ஒரு புதிய சமுதாய அமைப்பு அவசியம் வேண்டும்.

38. துவேஷத்திற்கு மாற்று அன்பே தவிர துவேஷமே அல்ல. நெருப்புடன் நெருப்பை மோதினுல் மீண்டும் அதிகமாகவே எரியும். நெருப்புடன் தண்ணீரைக் கூட்டினுலே அது அவியும். அது உண்மையானுல் நீங்கள் உங்களைப் பகைக்கிறவர்களிடத்தில் உங்களைப் பகைப்பது தவறு என்று, அவர்கள் கருதும் வண்ணம் நீங்கள் அவர்களிடத்து அன்பையே காட்டவேண்டும்.

39. உலகிலேயே காட்டுமிராண்டித் தனத்திலிருந்து விடுதலை பெற்ற முதல் இனம் தமிழ் இனம். அறிவியல் வளர்ந்து வருகிற இந்த இருபதாம் நூற்ருண்டில் என்னென்ன நாம் கனவு காண்கிருேமோ, அவற்றைப் பற்றியகுறிப்புக்களை எல்லாம் நாம் நமது இலக்கியங்களில் பரவலாகக் காண்கிருேம்.

40. பழம், சுவையாக இருக்கிறது என்று சொன்னுல் அதைத் தேடிப்பிடித்து வாங்கிச் சுவைத்து, அதன் சாற்றினை உட்கொள்ளும் மனிதர்கள் மனித உள்ளத்தை வளர்ப்பதற்குரிய நல்ல கருத்துக்களை-உயர்ந்த உண்மைகளை ஏற்றும் போற்ற முன் வரக்காணுேம்.

41. உடலின் வளர்ச்சிக்கு உணவு இன்றியமையாதது-உள்ளத்தின் வளர்ச்சிக்கு நல்ல கருத்துக்கள் இன்றியமையாதன.

42. நாமெல்லாம் மொழிவழித் தமிழர்கள்; நாட்டு வழி இந்தியர்கள்; கூடி வாழ உலகம் என்ற ஒருமைப்பாடே நமக்குத் தேவை.

43. 'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்க' என்ற பழமொழி அடிக்கடி நாட்டுப்புற மக்களாலும்- நகரத்தவர்களாலும் வழங்கப்படுவது. அதன் உண்மைப்பொருளை அவர்கள் சிந்தித்துப் பார்த்ததில்லை. ஒரு செயலை உரிய காலத்தில் செய்துவிடு என்ற முறையில்தான் அப் பழமொழியை வழங்குகின்றனர். இவ்வளவு சாதாரணமான பொருளைக் கருதி அந்தப் பழமொழி எழுந்திருக்க முடியாதென்பது உறுதி. அதன் உண்மைக் கருத்து என்ன? உன் உடம்பில் மூச்சுக் காற்றுள்ள போதே உன்னிடம் உள்ள தீச்செயலை தீக்குணத்தைத் தூற்றிவிடு-அகற்றிவிடு என்பதே அப் பழமொழியின் உண்மைத் தத்துவமாகும்.

44. மனிதர்கள் அதிகாரம்செய்யவே விரும்புகிறார்கள். தன்னை நோக்க எளியாரை அவன் ஏவல், அதிகாரம் கொள்வதில் ஆனந்தம் கொள்கின்றான். ஏவல் கொள்ள ஒருவரும் கிடைக்காது போனால் தனது மனைவியிடத்திலாவது ஏவல் செய்ய நினைக்கிறான். இப்படி எல்லாம் ஆள நினைக்கின்ற மனிதர்கள் தமக்கு வேண்டிய பொறிகளிடத்திலும் புலன்களிடத்திலும் அடிமையாக இருப்பது ஏன்? அவைகளின் அதிகாரத்துக்குக் கட்டுப்பட்டிருப்பது ஏன்? ஆசையே காரணம்.

45. தன்னலச் சார்புடையது தர்மம்; தமிழ் வழக்கின்பாற்பட்டது அறம்.

46. குழந்தைகளின் உள்ளம் மொட்டுப் போன்றது. அதை ஊதி ஊதி மலர்விக்க வேண்டும். அதிலே சமுதாய மணம் வீசச் செய்ய வேண்டும்.

47. வறுமை மிகவும் கொடியதுதான். ஆனால், வறுமைக்கு மருந்து பணம் என்று பலர் கருதுகிறார்கள். இக்கருத்து சரியானதல்ல. உழைப்பும், உழைப்புக்கு அடிப்படையான முயற்சியுமே வறுமையைப் போக்கும் அரு மருந்து.

48. சமயநெறி சமுதாய தொடர்புடைய நெறி. சமய நெறி வேறு, சமுதாய நெறி வேறு என்றுகருதுவது சரியல்ல.

49. ஒரு சிலரின் சுக வாழ்வுக்காக இந்த உலகம் என்றால் இவ்வுலகம் இருப்பதிலும் இறந்து ஒழிதல் நல்லது.

50. ஒரு நாட்டின் ஆட்சி மக்களின் நல் வாழ்வை அடிப்படையாகக் கொண்டதே ஆகும்.

51. இன்றைய வரிவிதிப்பு முறைகள் மக்களுக்குப் பெரும்பாலும் சாதகமாக இல்லை. இதனால் வரி என்றாலே மக்கள் கலங்குகின்றார்கள்.

52. தமிழ் இளைஞர் சமுதாயம் புதுமை படைப்போம் என்று எழுச்சிமிக்க ஆர்வத்தில் துடிக்கிறார்கள். புதுமை பழமையை அறிய

என்ன அளவுகோல் கொண்டுள்ளார்கள் என்பதை அறியவேண்டும்.

53. உலக ஏற்றத் தாழ்வுக்கு மகேசனிடம் விண்ணப்பிப்பதால் பயனில்லை. சமத்துவ சம வாய்ப்புச் சமுதாயம் அடைய இடையூராக இருக்கிறார்களே அந்த மனித குலத்தின்பால் முறையிட்டுத் தீர்வு காண முற்படவேண்டும்.

54. உலகியல் வாழ்க்கையை ஒழுங்குபடுத்துது குறள்; ஆன்மீக வாழ்க்கையை ஒழுங்குபடுத்துது திருவாசகம்.

55. இரயிலும் காரும் சென்று கொண்டிருக்கின்றன. காருக்காக ரெயிலின் போக்கைத் தடுக்காமல் வழிக்கதவை அடைத்து காரை நிறுத்தி, ரெயிலைப்போக விட்டு அதன் பின்னரே காருக்கு வழிவிடப்படுகிறது. ரெயில் சமுதாயத்தின் சின்னம். கார் தனிமனிதனின் சின்னம். தனி மனிதன் முன்னேற்றத்திற்காக சமுதாய முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்தலாமா?

56. தேவைக்கு அதிகமாகச் சேர்த்துக் கொண்டு, மேலும் பொருள் சேர்க்கும் நோக்கமும் கொண்டு அலைகின்றவனைப் பார்த்துச் சொன்ன பழமொழியே "போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து" என்பது. இன்றோ சுரண்டிச் சேர்த்து வைத்திருக்கும் சுய நலமிகள் மற்றவர்களைப் பார்த்து சொல்லக் கூடியதாக மாறிவிட்டது.

57. தனி மனிதனை சமுதாயத்தைக் காட்டிலும் பெரிதாக மதிக்கும் தொத்து நோய், இந்த நாட்டில் நெடு நாட்களாக வளர்ந்து வருகிறது. அது நல்லதல்ல. தனி மனித மலரிலே சமுதாய மணம் வீசவேண்டும்.

58. எது வந்தாலும் எது போனாலும் நமக்கென்ன? யார் என்ன சொன்னால் என்ன? நமக்கு ஏன் வீண் பொல்லாப்பு? என்று வாயை மூடிக் கொண்டிருப்பவனைத்தான் இன்றையத் தமிழ்ச் சமுதாயம் நல்லவன் என்கிறது.

59. வளமுடையாரிடமிருந்து மற்றவர்கள் பெறுவது உரிமை. அவர்கட்கு வழங்குவது வளமுடையார் கடமை; அந்தக் கனியைக் கொள்ளுதல் மனிதனின் உரிமை. ஊற்றெடுப்பது ஊருணியின் கடமை; அதை உண்ணப் பயன் படுத்திக் கொள்வது மனிதனின் உரிமை.

60. கவிஞர்கள் யாருக்காகச் சொல்லுகிறோம் என்று பார்த்து,அதனைச்சொல்லுகின்றசமுதாயத்தைப் பார்த்து அதற்கு தகுந்த இலக்கியம் ஆக்க வேண்டும்.

61. சாதி ஒழிப்பு பிரச்சாரமுறை ஆக்கத்தின் பாற்பட்டதாய் இருக்கவேண்டுமே தவிர, அழிவின் பாற்பட்டதாக அமைந்து விடுதல் கூடாது.

62. மக்களினத்தின் நல்வாழ்விற்கு பிரிவுணர்ச்சி நல்லதல்ல. அதிலும் சாதியின் பாற் பட்ட பிரிவு கொடிது; கொடிது.

63. எந்தவிதமான நடவடிக்கைகளிலும் சாதிப் பெயர் போடுகிற பழக்கத்தை நிறுத்த வேண்டும். பள்ளிகளில் பயிலுகிற மாணவ மாணவிகளிடத்தில் சாதிகளின் பெயர்களை புழக்கத்தில் இல்லாமல் செய்யவேண்டும்.

64. மனிதர்கள் கூடிவாழப் பிறந்தவர்கள்; அவர்கள் எத்தகைய மாறுபாட்டுணர்வுகளு மின்றிக் கூடிப் பழகும் கொள்கையை-உணர்வை உண்டாக்குவதுதான் சோஸலிஸம் என்கிற ஒப்புரவு. சிங்கங்களும், புலிகளும், கரடிகளும் இன்றைய கொடிய விலங்கினங்களும் காடு மலை களில்தான் வாழ்கின்றன என்பதில்லை. நாட்டு மக்கள் பலரது உள்ளங்களிலும் அவை நடமாடு கின்றன—வாழ்கின்றன. அத்தகைய உள்ளங் களைத் தூய்மைப்படுத்தும் சமூக கேந்திரமே, சமுதாய மையமே கோயில்கள்.

65. சமூகத்தில் ஏழ்மை, வறுமை என்ற தீ கனன்று வந்து நம்மைச் சுடாமல் இருப்பதற் காக நாம் அன்புத்தண்ணீரை வாரி இறைக்க வேண்டும்!

66. உணராதவனுக்கு உணர்ந்தவன் பொறுப்புடையவன். அறியாதவனுக்கு அறிந்த வன் பொறுப்புடையவன். தெரியாதவனுக்கு தெரிந்தவன் பொறுப்புடையவன். இந்த அடிப் படையில் நாம் நமது பொறுப்புக்களை உணர வேண்டும்.

67. நமக்கு எப்போதும் 'ஆமாம்' போடுகிறவர்களையே நாம் நண்பர்களாகப் பிடிக்கக்கூடாது. நம்மிடம் முரண்பாடு காணும் நேரத்தில் நம்மைத் தடுத்து நிறுத்தி, நீ செய்வது தவறு, உன் போக்கு நேர்மையானதல்ல என்று இடித்துக் கூறித் திருத்த முற்படுகின்றவர்களையே நாம் நமது நண்பர்களாகத் தேடிப் பெற வேண்டும்.

68. ஒரு நாளைக்கு மூன்றுவேளையல்ல நான்கு ஐந்து வேளைகள் கூடச் சாப்பிடுகின்றோம். போதாக்குறைக்கு யானை போல் நடந்து கொண்டே சாப்பிடுகிறவர்களும் பலர் இருக்கிறார்கள். ஆனால், கருத்து வளர்ச்சிக்காக ஒரு வேளையாவது படிக்க வேண்டாமா?

69. நம்முடைய பெட்டியிலிருந்து பணத்தை எடுக்கும்போது எண்ணிப்பார்த்துச் செலவு செய்கின்றோமே, அதுபோல நமது பெட்டிக்கு வந்த பணத்தை அது எப்படி வந்தது, எவ்வழியில் வந்தது என்று சிந்திக்க வேண்டாமா?

மொழி

மொழி

1. இறைவனுக்கு மொழிவேறுபாடு இல்லை. உலகமொழிகள், கலைகள் யாவும் இறைவனின் உரிமையே. இறைவழிபாடு இதயத்தைத்தொட வழிபடும் ஆன்மாவின் இதயம் நெக்குருக, புரியும் மொழியில் வழிபடுவதே அவசியமாகும் கட்டாயமாகும்

2. கருத்துக்கு முற்றிலும் மாருக உரை கூறுகிறவர்களுக்குத் தண்டனை இல்லை. இந்த நிலை மாறவேண்டும்.

3. பூம்பாவையை எழுப்பியது எம்மொழி? தொண்டர் நாதனை தூதிட விடுத்தது எது? என்பன போன்ற அருட்பெருஞ் செயல்களைச் செய்தது எது? என்ற இந்த விளுக்களுக்கு எல்லாம் விடை, எம்மொழி-செம்மொழி-அது தான் இன்பத் தமிழ் மொழி. தமிழுக்குரிய ஆற்றலும்-உயர்வும் - ஏற்றமும் - இனிமையும் வேறு எம்மொழிக்கும் இல்லை.

4. தமிழர்கள் அரசியல் கருத்துக்களில் மாறுபட்டாலும் மொழிவழி ஒன்று பட முடியும்.

5. தாய்மொழியை இன்னொருவர் பழித்துப் பேசும் போது—தாய் மொழிக்கு ஒரு இழிவு ஏற்படும்போது பொறுத்துக்கொண்டு இருப்பது மானமிழந்த செயலே ஆகும். அந்தப் பழியைப் போக்குவதன் மூலம்—இழிவைத் துடைப்பதன் மூலம் இனமாற்றத்தைக் காக்கப் பாடு பட வேண்டும்.

6. தமிழ் காலத்தால் மூத்தது--கருத்தாலும் அப்படித்தான். மனிதனின் குறைகளையும், அவசியங்களையும் பார்த்துப் பார்த்துத் தமிழ் வளர்ந்திருக்கிறது. மனித மனத்தைப் பக்குவப் படுத்தும் திறன் அதற்கு உண்டு.

7. இன்றைக்கு தமிழன்னை அணிந்துள்ள அணிகள் யாவும் பெரும் சிறப்புடையனவே. ஆனாலும், அந்தத் தமிழன்னை, அன்புத் தமிழ்மக்களே! இன்று 3½ கோடிப்பேர் இருக்கின்றீர்களே, நான் இன்று அணிந்துள்ள அணிகள் யாவும் உங்கள் அப்பன்—பாட்டன் முப்பாட்டன் ஆகியோர் வழங்கியன அன்றோ? நீங்கள் எனக்கு என்ன தந்திருக்கிறீர்கள்?'' என்று கேட்டால் என்ன பதில் சொல்ல முடியும்?

8. வீடு பெற்ற கல்லானையும், நாரையும், எந்த மொழியில் இறைவனை அழைத்தன? தொண்டர் நாதனைத் தூதிடை விட்ட தொன்மை மொழி எது? முதலை உண்ட பாலனை அழைத்த முன்மொழி எது? எலும்பைப் பெண்

ணுக்கிய எழில்மிகு மொழி எது? மறைக் கதவினைத் திறந்த மாண்புடை மொழி எது? தமிழன்றோ?

9. மனிதன் எத்தனைதான் பிறமொழிகளைக் கற்றுத் தெளிந்து புலமை பெற்றிருந்தாலும் அவன் தனது தாய் மொழியிலேதான் சிந்திக்க முடியும். அவனது உள்ளத்தைத் தொடும் ஆற்றலைப் பெற்றது அம்மொழியே.

10. தமிழன் வழிபாட்டுக்காகத் திருக்கோயிலுக்குச் செல்கிறான். தனது உள்ளத்தின் நெகிழ்ச்சிகளை இறைவனிடம் முறையிடத் துடிக்கிறான்; ஆனால், அவன் தாய் மொழியிலே, தாயாகவும் தந்தையாகவும் உள்ள தயாபரனைத் துதிக்க வழியில்லை.

11. தமிழ் வளர்ச்சி பற்றிய நம்முடைய முயற்சியின் அறுவடையை, இனிவரும் தலைமுறையினருக்காக விட்டு வைக்காமல் நம் தலைமுறையினருக்காக, நாமே நம்முடைய தலைமுறையிலேயே கண்டு முதல் செய்தாக வேண்டும்.

12. ஒரு மொழியின் வரி வடிவத்தையோ ஒலி வடிவத்தையோ சிதைக்க முற்படுவது சரியல்ல.

13. மொழி மக்களுக்கு மூச்சு போன்றது.

14. கல்வி, அறிவை மாத்திரம் வளர்த்து விடாமல் சிறந்த மனிதப் பண்புகளையும் வளர்க்கத் துணை செய்வதாக அமைதல் வேண்டும்.

15. உணவுக் கலப்படத்தைவிட மொழிக் கலப்படம் ஆபத்தானது. உணவுக் கலப்படத்தால் உடலுக்குத்தான் சீர்கேடு. மொழிக்கலப்படத்தால் உணர்வுக்கே ஆபத்து.

16. தமிழுக்கு அறிவியலோ, அறிவியலுக்குத் தமிழோ புதிதல்ல. தமிழில் எதையும் கொண்டுவர முடியும். தமிழால்தான் எதையும் சொல்ல முடியும்.

17. எத்துறை வளர்ச்சிக்கும் சிந்தனையே மையம். அடிப்படையுங்கூட. எல்லோரும் தாய் மொழியில் சிந்திப்பது எளிது.

18. தமிழுக்கு அறிவியல் புதிதன்று. அறிவியலுக்கும் தமிழ் புதிதன்று. நூற்றுக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே தமிழில், அறிவியற் கருத்துக்கள் நடை பயின்றதுண்டு.

19. கல்வி, ஆசிரியனால் மாணவனுக்குக் குக் கொடுக்கக் கூடிய ஒன்றல்ல. மாணவன் தானே கல்வி பெறுகிறான். அதற்கு ஆசிரியர் தூண்டு கோலாக அமைகிறான்.

20. மனித இனத்தின் அடிப்படை பிறப்புரிமை, சிந்தனை செய்யும் சுதந்திரமேயாகும். சிந்தனை செய்யும் சுதந்திரத்தைப் பறிப்பது கொடுங்கோலாட்சி. ஆதலால் எந்த ஆட்சியும் சுதந்திரத்தைப் பறிப்பதில்லை.

21. உடம்பிற்குத்தாய், உள்ளத்திற்குத் தாய்மொழி. தாய்மொழி வழியாகப்பெறும் சிந்தனேயே இயற்கையோடியைந்தது.

22. நாம் விஞ்ஞானிகள் ஆக விரும்ப வில்லே, விஞ்ஞானிகள் பிறக்க விரும்புகிருேம். அதற்குரிய சூழ்நிலேயைத் தமிழகத்தில் உண்டாக்க வேண்டுமாளுல், பயிற்சி மொழியைத் தாய் மொழியாக்க வேண்டும்.

23. தமிழினம், சிந்தனேயாலும் செல்வத்திளுலும் செழிக்கத் தாய்மொழியைப் பயிற்சி மொழியாகக்கொண்டு முன்னேற்றப் பாதையில் நடைபோடுவோமாக

24. வளமான வாழ்க்கைக்கு வழிகாட்டுவது மொழி. அறத்தையும் அன்பையும், பண்பையும் வளர்ப்பது மொழி. தேசீய கலாச்சார நாகரீகத்தை வளர்ப்பது மொழி.

25, நூல் நிலேயத்திற்குள் பாம்பை நுழைய விட்டால் கூடப் பரவாயில்லே, பண்பாட்டை வளர்க்கத் துணே செய்யாத — பண்பாட்டை குலேக்கின்ற நூல்களே நுழைய விடக்கூடாது.

26. திருக்குறள் தமிழகத்தின் தனி நூல்; பாரதத்தின் பேரிலக்கியம். உலகப் பொதுமறை; சுதந்திரபாரதத்தின் தேசிய இலக்கியமாக திருக்குறள் விளங்க வேண்டும்.

27. சுதந்திர பாரதத்திற்கு ஒரு மொழி தேசிய மொழியாக இருப்பது போல-ஒரு கொடி

தேசியக் கொடியாக இருப்பது போல்- ஒரு கீதம் தேசியக் கீதமாக இருப்பது போல பாரதத்திற்குத் திருக்குறளைத் தேசிய இலக்கியமாக்க வேண்டும்.

28. திருமணம் அழகான தமிழ்ச்சொல். பொருள் நிறைந்த தமிழ்ச்சொல்: திருமணத்தைப் போன்ற பொருள் நிறைந்த சொல் வேறு எம் மொழியிலும் இல்லை. திருமணத்தைத் தமிழர்கள், ஒரு பெரிய மகத்தான நிகழ்ச்சியாகவே கருதி வந்துள்ளார்கள்.

29, நெஞ்சைத் தொட்டு உறுக்கும் தன்மை தாய் மொழிக்கன்றி வேறு எம் மொழிக்கு இருக்க முடியும்?

30. நடமாடுகின்ற தனிமனிதனுக்கு முதுகெலும்பே இன்றியமையாத உறுப்பு- அது போலவே வாழ்கின்ற-வாழ விரும்புகின்ற மனித இனத்துக்கு அவரது தாய்மொழி முதுகெலும்பு.

31 ஒருவனுடைய வளர்ச்சியில் தாய் எவ்வளவு பங்கு பெற்றிருக்கிறாளோ- அதை விட அதிகமான பங்கைத் தாய் மொழி பெறுகிறது.

32. குழந்தை தன்னுடைய தாயை பிறர் காட்டுவாரின்றித்-தானே தெரிந்து கொள்வது போல்-ஆசிரியர் அன்று ஏடுகளில் தாமே இயல்பாக எண்ண- பேச-உணரக் கூடிய மொழியே தாய்மொழி.

33· தாய் மொழியாகவும், சிந்தனை மொழியாகவும்-இருக்கும் தமிழ்-கல்லூரி பயிற்சி மொழி

யாக இருக்குமானுல்-இளைஞர்கள் எளிதில் அறிவியல், பொருளியல் தத்துவத்தை எளிதில் உணர்வர்.

34. தமிழை- வளர்க்கின்ற- புதுயுகத்திற் கேற்ப வளப்படுத்துவது தமிழரின் கடமை.

35. தமிழிலே அறிவியல்- பொருளியல்-தொழிலியல்-உலகியல், சமூக இயல்-ஆகிய தத்துவங்கள் நிறைய எழுதப் பெற வேண்டும்.

36. தமிழ் வளர்ந்தாலே-தமிழ் என்றும் வாழும். தமிழர்களும் பலத்தோடு வாழ முடியும்.

37. தாய் மொழியைப் பயிற்சி மொழியாக்குவது-மொழிப்பற்றின் காரணமாக மட்டுமல்ல. -தமிழினத்தின் வாழ்விலே- வலிமையும் வனப்பையும் கொடுக்க- புதுமையும் பொலிவையும் ஊட்ட- செல்வத்தையும் செழிப்பையும் காண- தாய் மொழிப் பயிற்சி இன்றியமையாத ஒன்ருகும்.

38. நமது மொழி காலத்தாலும் கருத்தாலும் மூத்தது. பிற மொழிகள் காலம் மூத்து இருக்கலாம்: கருத்து இருக்காது, கருத்திருக்கலாம். காலப் பழமை இருக்காது. தமிழின் தொடக்க காலத்தில் இத்தகைய மொழி அமைப்பு தோன்றி இருக்காதுதான். பல்லாயிரக் கணக்கான காலப் போக்கு வழக்கில் வளர்த்திருக்கிறது. முள் நிறைந்த பாதை, நடக்க நடக்க நல்ல பாதையாக மாறுவதைப் போல, உலகில்

தோன்றியுள்ள சில மொழிகள் வெறும் பொழுது போக்கு இலக்கியங்களைத்தான் கொண்டிருக்கின்றன. ஆனால் தமிழ் இலக்கியங்கள் வாழ்விற்காகவே எழுந்தவை.

39. எண்ணப் பசிக்காக இன்றையக்கவிஞர்கள் சிலர்- மொழியில்- கவிதை இலக்கணத்தை மறந்து கவிதைகள் படைக்கின்றனர். அது மொழியின் ஆக்கத்திற்குப் பயன் தருவது ஆகாது.

40. ஒரு இனத்தினுடைய வாழ்வும் தாழ்வும் அந்த இனத்துடைய மொழி வளர்ச்சியைப் பொறுத்தே ஆகும்.

41. இலக்கியத்தன்மை பல நூல்களில் அமைந்திருக்கும்; ஆனால் அறத்தைக் காண முடியாது. இலக்கியமும் அறமுமாகத் திகழும் நூலில் அருள் தன்மையைக் காண முடியாது. இலக்கியமாகவும் அறநூலாகவும், அருள்நூலாகவும் ஒருங்கே திகழும் தன்மை திருக்குறள் ஒன்றினுக்கே உண்டு.

42. சாதாரண மனிதர்கள் எதையாவது திருடி விட்டால் "திருட்டு" என்கிறோம். அதே செயலைப் பெரியமனிதர் எனப்படுவோர் செய்தால் வியாபாரத் தந்திரம் "Business nack" என்கிறோம். சாதாரணமானவர்கள் வாக்கு மீறினால் நாணயமில்லாதவன்- சொல் உறுதியில்லாதவர்கள் என்கிறோம். பெரியவர்கள் எனப்படுவோர் அதைச் செய்தால் 'Tact and Diplomacy" என்

கிறோம். தமிழ் மொழி ஒழுக்கப் பண்பு நிறைந்த மொழி. எனவேதான் இத்தகைய ஒழுக்கக் கேட்டைக் குறிக்க வேற்றுமொழிச் சொல் பயன் படுதப் பெறுகிறது போலும்.

43. வழிபாடு மனிதனுக்குச் சோறு போல. சோறு வயிற்றுப்பசியைப் போக்குகிறது. வழி பாடு ஆன்மப் பசியைப் போக்குகிறது. ஆன்மப் பசியை போக்காத வழிபாட்டால் எத்தகைய பயனுமில்லை. வழிபாடு நெஞ்சைத் தொடுவதாக சிந்தையைக் கனிந்திருகச் செய்வதாக இருக்க வேண்டும்.

44. நம்மைப் பொறுத்தவரையில் நமது தமிழ்தான் நெஞ்சைத் தொடுகிற மொழி. நாம் எண்ணுகிற எண்ணத்தை எண்ணிய வண்ணம் வடித்தெடுக்கத் தாய் மொழியை விட வேறு சிறந்த மொழி வேறில்லை.

45. நெஞ்சைத் தொட்டு உலுக்கும் தன்மை தாய்மொழிக்கன்றி வேறு எம்மொழிக்கு இருக்க முடியும்?

அரசியல்

அரசியல்

1. தலைமைக்குத் தளராத நெஞ்சம் வேண்டும்; எதையும் தாங்கும் உள்ளம் வேண்டும். தம்மைப் பின்பற்றுவோரைக் காக்கும் ஆற்றல் தலைமைக்கு வேண்டும்.

2. உலகம் உள்ளவரையில் சமுதாயத்திடம், சிந்திக்கும் ஆற்றல் உள்ளவரையில் சிந்தனையால் உலகை ஒன்றுபடுத்த முடியாது.

3. ஆத்திகர்களையெல்லாம் யோக்கியர்கள் அல்ல என்று கூறுகிறார்கள். அப்படியானால் அரசியலில் இருப்பவர்களெல்லாம் யோக்கியர்களா?

4. அரசியல் அயோக்கியர்களின் கடைசிப் புகலிடம் என்று ஒரு ஆங்கிலப் பழமொழி உண்டு.

5. அரசியலில் உள்ளவர்களைக் காட்டிலும் சமயத்தில் உள்ளவர்கள் கொஞ்சம் யோக்கியமாக இல்லாது போனாலும் கூட யோக்கியராக இருக்க ஆசைப்படுவார்கள்.

6. தமிழ் நாகரீகம் செழித்து வளர இந்திய நாகரீகம் செழிக்கவேண்டும். இந்திய நாகரீகம் செழித்து வளர உலக மனித நாகரீகம், செழிக்க வேண்டும். இவை தவிர்க்க முடியாதவை இத்தகு ஒருமைப்பாட்டைக் கற்றுக்கொடுப்பதே இன்றயைக் கல்வி.

7. அரசியல் நமக்கு, நமது வீட்டின் ஓர் அறை. அவ்வளவுதானே யொழிய அந்த அறையே நமக்கு வீடல்ல.

8. உயர்ந்த இலட்சிய சமுதாயம் உருவாக நம்மை நாமே தியாகம் செய்யவேண்டும்.

9. குழந்தைகள் தன் போக்கில் வளருமாறுல் வெட்டிவிடப்படாத செடி கொடிகள் போல் கரடுமுரடாகத்தான் வளருவார்கள்.

10. சுதந்திர நாட்டில் கல்வி மனிதனை மனிதனுக்குவது, மனிதனை வாழ்வாங்கு வாழச் செய்வது.

11. வாழ்க்கையே ஒரு பல்கலைக் கழகம். பல்வேறு படிப்பினைகளைத் தரும் ஏடு. இயற்கை வாழ்க்கையில் அன்றன்றுடு நாம் அனுபவிக்கும் அனுபவங்கள், அறிவின் ஊற்று இவைகளிலிருந்தே நாம் கல்வியைப் பெற முடியும்.

12. ஆசிரிய நலனை அரசு பேணவேண்டும் என்பதைத் தமிழகத்தின் எல்லாச் சார்பினரும் அரசியல் கட்சி வேறுபாடுகளின்றி வற்புறுத்துவார்கள்.

13. சான்றோர் நெறியே ஆசிரிய நெறி. அந் நெறிவழியே பயில ஆசிரிய சமூகம் முன் வருவதாக.

14. பல்சுவை உடம்பை வளர்க்கப் பயன் பெறுவதுபோல பல மொழிக் கல்வி தமிழனின் அறிவை வளர்க்கப் பெரிதும் பயன்படும்.

15. இன்றையப் பள்ளிகளே நாளைய பாரத சமுதாயத்தின் விளை நிலம்: ஆசிரியர்களே உழவர்கள்; நவபாரதத்தை வழக்கும் சிற்பிகள்.

16. உலக மனித சமுதாயத்தோடு நாம் உறவு கொள்வதால் நம்மிடமுள்ள எதையும் இழக்கவேண்டியதில்லை; நம்மையாரும் சுரண்ட மாட்டார்கள்! என்ற உறுதியான நம்பிக்கை ஒவ்வொருவருக்கும் ஏற்படவேண்டும். இத்தகைய உணர்வின் அடிப்படையில்தான் நாம் தேசீய ஒருமைப்பாட்டை உண்டாக்க முடியும்.

17. உணர்வு அடிப்படையில் ஒருமைப்பாடு ஏற்படவேண்டும். சாதி, இனமொழி வேறுபாடுகளை நிரந்தரமாக நாம் ஒதுக்கித் தள்ளிவிட வேண்டும்.

18. தாய்திருநாட்டால், பேசும் மொழியால் யாராக இருந்தாலும், வேற்றுமையுணர்வுகளை வேரோடு கில்லியெறிந்து எல்லோரும் ஓர்குலம் எல்லோரும் ஓரினம் என்ற ஒருமைப்பாட்டு உணர்வோடு உலக மனித சமுதாயத்தை உருவாக்கும் முயற்சியில் ஈடுபடவேண்டும்.

19. மொழி, இனப்பிரிவுகள் வேறுபட்ட போதிலும், பண்பாட்டு வழி நாம் ஒன்றுபட்ட மக்கள். மத-மொழி வேறுபாடுகள் வலுப்பெற்ருல் நம்மிடையே ஒற்றுமை குன்றி, வாராது வந்த சுதந்திரத்தை காப்பாற்றத் திறன் அற்ற வர்களாகிவிடுவோம்.

20. நீரும் நெருப்பும் தம்முள் வேறுபட்டன. எனினும் அவற்றுள்ளும் ஓர் ஒருமைப்பாட்டை யும் உணர்வையும் உண்டாக்குவதன் மூலமே அவை இரண்டினுலும் ஆயபயனை நாம் அனுப விக்க முடிகிறது. நீருக்கும் நெருப்புக்கும் இடையே, உறவு ஏற்படுகிறது. ஆனுலும் கலப்பு ஏற்படுவதில்லை. கலப்பு ஏற்பட்டால் தீ அவிந்து போகும். அதுபோலவே, பாரதத்தின் பல்வேறு மொழிவழிப்பட்ட இனங்களுக்கிடையே நெருங் கிய உறவு இருக்கவேண்டும். அதே நேரத்தில் ஒன்றையொன்று அழிக்கின்ற வண்ணம் கலப்பு ஏற்படுதல் கூடாது.

21. தேசிய இலக்கியமாகத் திகழத் தகுதி யுடைய ஒரு சிறந்த இலக்கியம் திருக்குறளே யாம். அதை இந்திய தேசத்தின் தேசிய இலக்கிய மாக இந்தியப் பேரரசு ஏற்றுக்கொள்ள வேண்டும்.

22. பாயசத்தில் மிதப்பது முந்திரிப் பருப் பாக இருந்தால் பாயசம் சுவையுடையதாக இருக் கும்; மிதப்பது பாச்சையாக இருந்தால் பாயசம் பயனும் சுவையும் இழக்கும். அதுபோலத்தான்,

சமுதாயத்தின்மேல் மட்டத்தில் நின்று விளங்கும் தலைவர்கள் ஒழுங்கும், நேர்மையும், நாணயமும், நாட்டு நலனில் அக்கறையும் உடையவர்களானால், சமுதாயம் சிறந்து விளங்கும். இல்லையானால் சமுதாயமே பண்பும்-பயனும் அற்றதாகிவிடும்.

23. எனது மதத்தை நான் பெரிதும் மதித்துப் போற்றுகிறேன். என் மதம் எனக்குப் பெரிது. எனினும், எனது நாட்டுநலனோடு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது எனது நாட்டு நலன் தான் எனக்குப் பெரிது.

24. வாழ்வின் கோணல்கள் ஒவ்வொன்றையும் தொட்டு உணர்த்த தலைமைக்குத் தளராத நெஞ்சம் வேண்டும். எதையும் தாங்கும் பண்பு வேண்டும். தம்மைப்பின்பற்றுவோரை காக்கும் ஆற்றல் வேண்டும்.

25. நம்பிக்கையுணர்வை ஊட்டுவதே, நாட்டில் ஒற்றுமையைக் காண வழி.

26. உலகிலேயே மிகச் சிறந்த சமயம் சைவ சமயம். மார்க்சியத்திற்கும் நமக்கும் 35 அல்லது 40 விழுக்காடுதான் வேறுபாடு இருக்கும். அதுவும் 'கடவுளுண்மை'யில் இந்த வேறுபாட்டிற்குக் காரணம் மார்க்ஸ் பிறந்த நாடு—பேசிய மொழி—அவர் வாழ்ந்த சமுதாயம்—அவர் வாழ்ந்த காலம் ஆகியனவே. மார்க்ஸ் நமது தமிழகத்தில் தோன்றியிருந்தாரானால் இந்த அளவு வேறுபாடும் இருந்திருக்காது. அந்த அளவிற்கு நமது

சைவ சமயம்—உயிருண்மை, உயிர்களின் உரிமை ஆகியன பற்றிப் பேசுகிறது.

27. மொழியால் நாம் தமிழர்கள் - தேசத்தால் நாம் இந்தியர்கள்-நாமெல்லாம் இந்தியக் குடிமக்கள் என்று இதய பூர்வமாக உறுதிமொழி எடுத்துக் கொள்கிறோம். எந்த நிலையிலேயும் மொழியாலோ மதத்தாலோ அல்லது சாதியாலோ எந்தவிதமானவேற்றுமையும்எழுவதற்குநாங்கள் இடமளிக்க மாட்டோம். பாரதத் தாய்க்கும் பாரத மக்களுக்கும் பணிசெய்து வாழ ஆயத்தம் எடுத்துக் கொள்வோமாக!

28. வாழ்க்கையில் எந்தக் காரணத்தைக் கொண்டும் வேண்டுதல், வேண்டாமை, பாராட்டுவது சமய ஒழுக்கமாக மாட்டாது.

29. கூடி உறவாடப் பிறந்த மனிதகுலம் வேற்றுமைச் சுவர்களை எழுப்பிக் கொண்டது வருத்தந் தக்கது.

30. ஜனநாயக சோஷலிசத் தத்துவத்தை நடைமுறை படுத்தும் பொறுப்பு ஆட்சியினுடையதா? மக்களுடையதா?

31. அக ஒழுக்கத்தைப் பெற்ற மனிதனே அனைவரும் போற்றும் பெருங்குடி மனிதன்.

32. மனித சமுதாயம் நிறைவை நோக்கி நடைபோட வழிமுறைகளை எடுத்துக் காட்டுபவனே எழுத்தாளன்.

33. எழுத்து மகிழ்ச்சி ஊட்டுவதாக மட்டும் அமையாமல் படிக்கும் மக்கள் சமுதாயத்தின் தகுதியை உயர்த்தக் கூடியதாகவும் எழுத்துப் படைப்புக்கள் அமையவேண்டும். அவை சிந்தனை ஊற்றைச் செழுமைப் படுத்துவனவாகவும் இருத்தல் வேண்டும்.

34. படித்தோரில் படிக்காதவர்களும் படிக்காதவர்களில் படித்தோரும் உண்டு.

35. மனித குலத்தை நேசிக்கும் உணர்வும் வாழ்விக்க வாழும் உணர்வுமே அறிவு.

36. அறிவுலகத்திலேயும் கூட ஆதிக்கக்காரர்கள் இருக்கிறார்கள். இந்த உலகத்தில் நீ இன்பம் பெற இந்த உலகத்திலேயே வாழ்வாங்கு வாழக் கற்றுக்கொள். சமுதாயத்திற்கும் பாரம்பரியத்திற்கும் நன்மை வருமா என்று பார்ப்பதே அறிவு.

37. 'ஜனநாயகம்' குழந்தைப் பருவத்தில் இருக்கிற நமது நாட்டில் நல்வாய்ப்பின்மையின் காரணமாக அரசியல் உணர்வு அதிகமாக வளர்ந்து வருகிறது. எதற்கெடுத்தாலும் அரசியல். எல்லாமே அரசியல். எங்கணும் நீக்கமற அரசியல்வாதிகளின் நுழைவும், ஆரவாரமும். சமயத் துறையினராயினும் சரி, அறிஞராயினும் சரி, அடக்கமாகச் சமூகத் தொண்டாற்றுபவராயினும் சரி அரசியல் ரீதியில் அவர்களுடைய அந்தஸ்து புறக்கணிக்கப் பெறு

கிறது. அதனாலேயே அரசியலில் அளவுகடந்த 'மோகம்' ஏற்பட்டிருக்கிறது. எல்லோரும் எப்படி யாவது, அரசியல் என்ற அனுமதிச் சீட்டைப் பெற முயற்சிக்கின்றனர். அரசியல் சார்பின்றி யும் பல நல்ல செயல்களைச் செய்ய முடியும் என்ற நம்பிக்கையை ஊட்டாத வரையில் அரசியல் தட்டே கனக்கும். சமய சமுதாயச் சேவைத் துறையினர் குறைந்து விடுவர். இவற்றையெல் லாம் எண்ணிப் பார்த்துக் கணக்கில் எடுத்துக் கொண்டு, அரசியல் சமுதாயம்-சமயம் ஆகியவற் றிற்கு இன்னின்ன கொள்கைகள் - கடமைகள் உரியன என்று தெளிவுபடுத்த வேண்டும்.

தலைமுறை — தலைமுறையாகத் தமிழ்க் குடி யினர் சிரக்க வேண்டாமா? வாதவூராரும்-வள்ளு வரும்-கம்பரும்-பிறந்த தமிழ்நாட்டின் குழந்தை கள் களத்துமேட்டில் காளைமாடு மேய்க்கலாமா? ஔவையாரும், காக்கை பாடினியாரும் பிறந்த தமிழ்நாட்டின் செல்வச் சிறுமியர்கள் சாணந் தட்டி வாழலாமா? கூடவே கூடாது? மனிதன் தனிதத் தன்மையோடு-அறவுணர்வோடு-அருளி யல் சார்போடு கூடி வாழும்போது அவனுடைய வாழ்வு முழு நிலை எய்துகிறது.